பேராசிரியர் கலையரசன் அதிகாலை கைது! மன்னிப்பு கேட்பது வேறு! தவறுக்குப் பொறுப்பேற்பது என்பது வேறு!

விமர்சனங்களுக்கு கைது நடவடிக்கையைப் பயன்படுத்துவது ஜனநாயகத்துக்கு உகந்தது அல்ல!

சென்னை உயர்நீதிமன்றம் த.வெ.க. அரசுக்கு கண்டனம்!

சென்னை, நவ. 4–

சென்னை உயர்நீதிமன்றத்தில் கழக கவுன்சிலர் சுதா தீனதயாளன் ஜாமீன் கோரிய வழக்கில் பேராசிரியர் கலையரசன் அதிகாலை கைது செய்யப்பட்டத்தை குறித்து நீதிபதி கருத்து தெரிவிக்கையில் விமர்சனங்களுக்கு கைது நடவடிக்கையை பயன்படுத்துவது ஜனநாயகத்துக்கு உகந்தது அல்ல என்றும் மன்னிப்பு கேட்பது வேறு! தவறுக்கு பொறுப்பேற்பது என்பது வேறு! என்றும் த.வெ.க. அரசுக்கு காட்டமான கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற திமுக முப்பெரும் விழாவில் கழக கவுன்சிலர் சுதா தீனதயாளன் மீது காவல் துறை வழக்குப் பதிவு செய்த நிலையில், அவருக்கு முன் ஜாமீன் வழங்கி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி 95-வது வார்டு திமுக கவுன்சிலரும், மகளிர் அணி நிர்வாகியுமான டி.சுதா தீனதயாளன், கடந்த அக்.7-ம் தேதி சென்னை - ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடந்த கழக முப்பெரும் விழாவில், முதல்வர் விஜய் குறித்து பேசினார்.

பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்திருந்தனர். இந்நிலையில், தனக்கு முன்ஜாமீன் கோரி சுதா தீனதயாளன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

நீதிபதி என்.ரமேஷ் முன்பாக நடந்தது. மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் அ.தாமோதரன், 'மனுதாரருக்கு தற்போது 60 வயதாகிறது. இதற்கு முன்பாக அவர் மீது எந்த குற்ற வழக்கும் நிலுவையில் இல்லை. முதல்வர் குறித்த தனது பேச்சுக்காக அவர் ஏற்கெனவே வருத்தம் தெரிவித்துவிட்டார். எதிர்காலத்திலும் கவனத்துடன் பேசுவதாக உறுதியளித்துள்ளார்' என்றார். அரசு தரப்பு வழக்கறிஞர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வாதிட்டார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி என்.ரமேஷ் பிறப்பித்துள்ள விரிவான உத்தரவின் விவரம் வருமாறு:

'அரசியல் ரீதியிலான விமர்சனங்களுக்கும், பேச்சுரிமைக்கும் அரசியலமைப்பு சட்டம் தந்துள்ள பாதுகாப்பை புறம்தள்ளி, கைது நடவடிக்கையை ஒரு தண்டனை வழங்கும் கருவியாக ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது. அரசியல் ரீதியாக எழும் விமர்சனங்களை எதிர்கொள்ள முடியாமல் காவல் துறையை ஆயுதமாக்கி கைது நடைமுறையை மேற்கொள்ளக்கூடாது.

அவதூறாக பேசுவது மட்டுமே அமைதிக்கு குந்தகம் ஆகிவிடாது!

ஆட்சியில் இருப்பவர்களின் செயல்பாடுகளை விமர்சிப்பதும், கேள்வி எழுப்புவதும் ஜனநாயகத்தின் அடிப்படை அம்சம். அரசியல்



அவதூறாக பேசுவது மட்டுமே பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் குற்றமாகி விடாது. அந்த பேச்சு வன்முறையை தூண்டும் விதத்தில் உண்மையிலேயே பொது அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்தினால் மட்டுமே அதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக பேச்சுரிமைக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளும் அரசியலமைப்பு சட்டத்தின் வரம்புகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

முதல்வர் குறித்து மனுதாரர் அவதூறாக பேசியிருந்தால் அதற்காக அவதூறு வழக்கு தொடரலாம். அதை விடுத்து அரசியல் உள்நோக்கத்துடன் வேறு குற்றப் பிரிவுகளை பயன்படுத்தி போலீஸார் நடவடிக்கை எடுப்பது சட்ட நடைமுறைகளை தவிர்ப்பது போலாகிவிடும்.

தற்போதுள்ள சூழலில், நாட்டில் மட்டுமின்றி தமிழகத்திலும் அரசியல் விவாதங்கள் பெருமளவில் சமூக வலைதளங்கள் மூலமாகவே நடைபெறுகின்றன. ஒவ்வொரு அரசியல் கட்சியினரும் சமூக வலைதளப் பிரிவுகளை நிர்வகித்து வருகின்றனர். இந்த சமூக வலைதளப்பிரிவு, எதிர்க்கட்சியினரை விமர்சிப்பதும், கேலி, கிண்டல் செய்வதும், அவதூறாகப் பேசுவதும் தொடர்கதையாக உள்ளது.

ஆனால், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு எதிரான புகார்களிலும், எதிர்க்கட்சியினருக்கு எதிரான புகார்களிலும் காவல்துறை ஒரே மாதிரியான அணுகுமுறையை கடைபிடிக்க வேண்டும். காவல்துறை அரசுக்குத்தான் சேவை செய்கிறதேயன்றி, ஆளுங்கட்சிக்கு சேவை செய்யவில்லை. குறிப்பாக ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என எந்த பாகுபாடும் இன்றி காவல் துறை செயல்பட வேண்டும்.

காவலில் எடுத்து விசாரிக்க தேவையில்லை!

அதேபோல ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டு காணொலியாகவும் ஆவணமாகவும் உள்ள பேச்சு தொடர்பான வழக்குகளில், விசாரணைக்காக மனுதாரரை காவலில் எடுத்து விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை. யாரையோ திருப்திபடுத்தும் நோக்கில் கைது நடவடிக்கை இருக்கக்கூடாது.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவர் சமூக வலைதளத்தில் கருத்து பதிவிட்டால் சில மணி நேரங்களிலேயே போலீஸார் நடவடிக்கை எடுக்கின்றனர்.

ஆனால் அதுவே ஆளுங்கட்சியினர் என்றால் வழக்குப் பதிவு செய்வது கூட இல்லை என்ற குற்றச்சாட்டு ஒவ்வொரு ஆட்சியின் போதும் எழுந்து கொண்டிருக்கிறது. போலீஸாரின் நடவடிக்கைகளை பொதுமக்களும் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் இடையே காவல் துறை ஒரே மாதிரியான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது என்பது காவல் துறை வழங்கும் சலுகையோ, மரியாதையோ அல்ல. அது அரசியலமைப்பு சட்ட ரீதியாக காவல்துறைக்கு விதிக்கப்பட்டுள்ள அடிப்படை நிபந்தனையாகும்.

பேராசிரியர் கைதில் அத்துமீறல்!

ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. குறித்து சமூக வலைதளத்தில் அவதூறான கருத்து பதிவிட்டதாகக் கூறி சமீபத்தில் அதிகாலை நேரத்தில் புகழ் பெற்ற பொருளாதார நிபுணர் ஒருவர் சாதாரண உடையில் வந்த போலீசாரால் அழைத்து செல்லப்பட்டார். அந்த சமூக வலைதளப்பதிவு அவரது புகைப்படத்தை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட போலியான கணக்கு என்பது தெரிந்ததும் அன்றைய தினமே அவர் விடுவிக்கப்பட்டார்.

அதன்பிறகு அவர் தலைமைச் செயலகத்துக்கு வரவழைக்கப்பட்டு முதல்வருடன் சந்திக்கிறார். தவறு நடந்துவிட்டது என்பதை அமைச்சர் ஒருவரும் பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார். அதிகாலை வேளையில் ஒருவரை கைது செய்ய முற்படும்போது, அந்த சமூக வலைதளப் பதிவின் உண்மைத் தன்மை குறித்து ஏன் சரி பார்க்கவில்லை. இதற்காக அந்த போலீஸார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மன்னிப்பு கேட்பது வேறு, தவறுக்கு பொறுப்பேற்பது வேறு. செல்வாக்கும், புகழும் உள்ள ஒருவருக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்கலாம். இதுவே சாதாரண குடிமகன் என்றால் அவருக்கு எந்த நிவாரணமும் கிடைக்காது. அவர் தவறான புகாரில் கைது செய்யப்பட்டால் சிறை நீதிமன்ற காவல் என நீண்டகால வழக்கு விசாரணையை எதிர்கொள்ள நேரிடும் என்பதை போலீசார் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். உயர் பதவிகளில் இருப்பவர்கள் அரசியல் ரீதியாக எழும் விமர்சனங்களையும், கேலிகளையும், எதிர்ப்புகளையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். விமர்சனங்களுக்கு கைது நடவடிக்கையைப் பயன்படுத்துவது ஜனநாயகத்துக்கு உகந்ததல்ல.

ஒருவரின் சுதந்திரமான பேச்சுரிமையைப் பறிக்கும் நோக்கில் நீதிமன்றங்கள் நிபந்தனை விதிக்க முடியாது. எனவே, மனுதாரருக்கு முன்ஜாமீன் வழங்குகிறேன். மனுதாரர் சென்னை ஜார்ஜ் டவுனில் உள்ள 7-வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ரூ.25 ஆயிரம் பிணைத்தொகையுடன், அதே தொகைக்கு இருநபர் ஜாமீன் உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

இவ்வாறு நீதிபதி கூறினார்.

ரூ.5 கோடி பேரம் தொடர்பாக

அமைச்சர் ராஜ்மோகன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்!

லஞ்ச ஒழிப்புத்துறையில் தி.மு.க. சார்பில் கழக சட்டத்துறை இணை செயலாளர் இ.பரந்தாமன் மனு!

சென்னை, நவ.4-

5 கோடி ரூபாய் பேரம் தொடர்பாக அமைச்சர் ராஜ்மோகன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, தி.மு.க. சார்பில் லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் எழும்பூரில் நடைபெற்ற தமிழ்நாடு நாள் அரசு விழாவில் பங்கேற்று பேசியபோது தனக்கும், முதலமைச்சருக்கும் இடையே உள்ள அனுபவங்களை சொல்கிறேன் என்று கூறினார். அப்போது, இயல், இசை நாடக மன்றத் தலைவர் பதவியை எனக்கு கொடுக்க சொல்லுங்கள், அதற்காக 5 கோடி ரூபாய் தருகிறேன் என்று கூறியவரை தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் லயோலா மணி தன்னிடம் அழைத்து வந்ததாக மேடையிலேயே பேசியுள்ளார். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் பேசியதை ஆதாரமாக கொண்டு ஊழல் தடுப்பு பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கக்கோரி தி.மு.க சார்பில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குனரிடம் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான இ.பரந்தாமன் புகார் மனு அளித்துள்ளார்.

அவர் அளித்த மனுவின் முக்கிய கோரிக்கைகள் வருமாறு:-

இயக்குநர், லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநரகம், பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



(அ) ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரிவுகள் 8 மற்றும் 12, பாரதிய நியாய சன்ஹிதா, 2023ன் பிரிவு 61 மற்றும் ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 7A ஆகியவற்றின் கீழ் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ய வேண்டும்.

விசாரணையில் வெளிப்படும் தகவல்களின் அடிப்படையில், பள்ளிக்கல்வி மற்றும் தகவல் துறை அமைச்சர் ராஜ்மோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் ஏ.லயோலா மணி, ரூ.5,00,00,000/ வழங்க முன்வந்த அடையாளம் தெரியாத நபர் மற்றும் தொடர்புடைய பிற நபர்கள் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) அமைச்சர் ராஜ் மோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் ஏ. லயோலா மணி ஆகியோரின் வாக்குமூலங்களைப் பதிவு செய்து, லஞ்சம் வழங்க முன்வந்த நபரின் அடையாளம், அந்த முன்மொழிவு செய்யப்பட்ட தேதி, இடம் மற்றும் அதன் தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும்.

(இ) 01.11.2026 அன்று வெளியிடப்பட்ட அமைச்சரின் உரையின் அசல் மற்றும் திருத்தப்படாத காணொளிப் பதிவை, தகவல் மற்றும் மக்கள் தொடர்புத் துறையிடமிருந்தும், அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஊடக நிறுவனங்களிடமிருந்தும், பாரதிய சாக்ஷ்ய அதிநியம், 2023ன் பிரிவு 63ன் கீழ் தேவையான சான்றிதழுடன் கைப்பற்றிப் பாதுகாக்க வேண்டும்.

(ஈ) லஞ்சம் வழங்க முன்வந்த நபர், ஏ. லயோலா மணி, அமைச்சர் திரு. ராஜ்மோகன் மற்றும் சம்பந்தப்பட்ட பிற இடைத்தரகர்கள் ஆகியோருக்கு இடையிலான தொலைபேசி அழைப்பு விவரங்கள், குறுஞ்செய்திகள் மற்றும் பிற மின்னணு தகவல்களைப் பெற வேண்டும்.

(உ) சம்பந்தப்பட்ட நபர்களின் பதவி அல்லது அரசியல் செல்வாக்கால் பாதிக்கப்படாமல், நேர்மையான, பாரபட்சமற்ற மற்றும் காலக்கெடுவுக்குள் விசாரணையை நடத்த வேண்டும்.

(ஊ) இந்தப் புகாரைப் பெற்றதற்கான ஒப்புகையையும், பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, 2023ன் பிரிவு 173(2)ன் கீழ் பதிவு செய்யப்படும் முதல் தகவல் அறிக்கையின் நகலையும் புகார் தாரருக்கு வழங்க வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப்பட்டணத்தில் மாவட்டச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தே. மதியழகன் தலைமை தாங்கி, இலவச கண் சிகிச்சை முகாமைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் கே.வி.எஸ். சீனிவாசன், பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணைத் தலைவர் செந்தில்குமார், ஒன்றியச் செயலாளர்கள் தேங்காய் சுப்பிரமணி, சரவணன், பேரூர்க் கழக செயலாளர் பாபு, முன்னாள் பேரூர்க் கழக செயலாளர் சாஜித் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். கேபிள் சின்னசாமி முகாமிற்கான ஏற்பாட்டை செய்திருந்தார்.

உதகை கிழக்கு நகரக் கழகக் கூட்டம்!

உதகை, நவ. 4–

உதகை கிழக்கு நகர தி.மு.கழக நிர்வாகிகள் மற்றும் கிளைச் செயலாளர்கள், பிரதிநிதிகள் கூட்டம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. உதகை கிழக்கு நகரக் கழக செயலாளர் எஸ்.ஜார்ஜ் தலைமை வகித்தார். இதில் கழகப் பிரதிநிதி தலைமை பொதுக்குழு உறுப்பினர் எச்.மோகன் குமார் கலந்து கொண்டு சிறப்பித்தார். இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் ஜே. ரவிக்குமார் ஜெயகோபி, கார்டன் கிருஷ்ணன், இச்சு பாய், அணில் குமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் தலைமைக் கழக ஆணைக்கிணங்க, உதகை கிழக்கு நகரத்தில் உள்ள வார்டு கிளை கழக செயலாளர்கள், பிரதிநிதிகளுடன் கழக வார்டு மறு சீரமைப்பு மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இதில் கழக நிர்வாகிகள், கிளைக் செயலாளர்கள், பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் நகர மன்ற உறுப்பினர்கள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வேதாரண்யம் செ.யூசுப்

நவம்பர் 4 (2013)



பள்ளிப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு வேதாரண்யம் பகுதியில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

திருத்துறைப்பூண்டி வட்டக் கழக துணைச் செயலாளராகவும், 25 ஆண்டுகள் தொடர்ந்து வேதாரண்யம் ஒன்றியக் கழகச் செயலாளராகவும், தலைமை செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைக் கழக பேச்சாளராகவும் திறம்பட பணியாற்றியவர்.

இரண்டு முறை நாகை மாவட்ட ஊராட்சி மன்றத் துணைத் தலைவராகப் பணியாற்றி வேதாரண்யம் பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

1964ல் நடைபெற்ற மொழிப் போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.